## ஆண்டாள் அருளிச் செய்த
## நாச்சியார் திருமொழி

### பன்னிரண்டாம் திருமொழி - மற்றிருந்தீர்கட்கு
### தலைவி கண்ணன் உள்ள இடத்தில் தன்னைக்
### கொண்டு விடும்படி உற்றாரை வேண்டுதல்

** மற்றிருந்தீர்கட்கு அறியல் ஆகா *
மாதவன் என்பதோர் அன்பு தன்னை *
உற்றிருந்தேனுக்கு உரைப்பதெல்லாம் *
ஊமையரோடு செவிடர் வார்த்தை **
பெற்றிருந்தாளை ஒழியவே போய்ப் *
பேர்த்தொரு தாய் இல் வளர்ந்த நம்பி *
மற்பொருந்தாமற் களம் அடைந்த *
மதுரைப் புறத்தென்னை உய்த்திடுமின் 1

நாணி இனி ஓர் கருமம் இல்லை *
நால் அயலாரும் அறிந்தொழிந்தார் *
பாணியாதென்னை மருந்து செய்து *
பண்டு பண்டாக்க உறுதிர் ஆகில் **
மாணி உருவாய் உலகளந்த *
மாயனைக் காணில் தலை மறியும் *
ஆணையால் நீர் என்னைக் காக்க வேண்டில் *
ஆய்ப்பாடிக்கே என்னை உய்த்திடுமின் 2

தந்தையும் தாயும் உற்றாரும் நிற்கத் *
தனி வழி போயினாள் என்னும் சொல்லு *
வந்த பின்னைப் பழி காப்பரிது *
மாயவன் வந்துருக் காட்டுகின்றான் **
கொந்தளம் ஆக்கிப் பரக்கழித்துக் *
குறும்பு செய்வான் ஓர் மகனைப் பெற்ற *
நந்தகோபாலன் கடைத்தலைக்கே *
நள்ளிருட்கண் என்னை உய்த்திடுமின் 3

அங்கைத் தலத்திடை ஆழி கொண்டான் *
அவன் முகத்தன்றி விழியேன் என்று *
செங்கச்சுக் கொண்டு கண்ணாடை ஆர்த்துச் *
சிறு மானிடவரைக் காணில் நாணும் **
கொங்கைத் தலம் இவை நோக்கிக் காணீர் *
கோவிந்தனுக்கல்லால் வாயில் போகா *
இங்குத்தை வாழ்வை ஒழியவே போய் *
யமுனைக் கரைக்கென்னை உய்த்திடுமின் 4

ஆர்க்கும் என் நோய் இது அறியல் ஆகாது *
அம்மனைமீர்! துழதிப் படாதே *
கார்க்கடல் வண்ணன் என்பான் ஒருவன் *
கை கண்ட யோகம் தடவத் தீரும் **
நீர்க்கரை நின்ற கடம்பை ஏறிக் *
காளியன் உச்சியில் நட்டம் பாய்ந்து *
போர்க்களமாக நிருத்தம் செய்த *
பொய்கைக் கரைக்கென்னை உய்த்திடுமின் 5

கார்த் தண்முகிலும் கருவிளையும் *
காயா மலரும் கமலப் பூவும் *
ஈர்த்திடுகின்றன என்னை வந்திட்டு *
இருடீகேசன் பக்கல் போகே என்று **
வேர்த்துப் பசித்து வயிறசைந்து *
வேண்டடிசில் உண்ணும் போது * ஈதென்று
பார்த்திருந்து நெடுநோக்குக் கொள்ளும் *
பத்தவிலோசனத்து உய்த்திடுமின் 6

வண்ணம் திரிவும் மனம் குழைவும் *
மானம் இலாமையும் வாய் வெளுப்பும் *
உண்ணல் உறாமையும் உள் மெலிவும் *
ஓதநீர் வண்ணன் என்பான் ஒருவன் **
தண்ணந்துழாய் என்னும் மாலை கொண்டு *
சூட்டத் தணியும் பிலம்பன் தன்னை *
பண்ணழியப் பலதேவன் வென்ற *
பாண்டி வடத்தென்னை உய்த்திடுமின் 7

கற்றினம் மேய்க்கலும் மேய்க்கப் பெற்றான் *
காடு வாழ் சாதியும் ஆகப் பெற்றான் *
பற்றி உரலிடை ஆப்பும் உண்டான் *
பாவிகாள்! உங்களுக்கேச்சுக் கொலோ? **
கற்றன பேசி வசவுணாதே *
காலிகள் உய்ய மழை தடுத்து *
கொற்றக் குடையாக ஏந்தி நின்ற *
கோவர்த்தனத்தென்னை உய்த்திடுமின் 8

கூட்டில் இருந்து கிளி எப்போதும் *
கோவிந்தா! கோவிந்தா! என்றழைக்கும் *
ஊட்டுக் கொடாது செறுப்பன் ஆகில் *
உலகளந்தான் என்றுயரக் கூவும் **
நாட்டில் தலைப் பழி எய்தி *
உங்கள் நன்மை இழந்து தலை இடாதே *
சூட்டுயர் மாடங்கள் சூழ்ந்து தோன்றும் *
துவராபதிக்கென்னை உய்த்திடுமின் 9

** மன்னு மதுரை தொடக்கமாக *
வண்துவராபதி தன்னளவும் *
தன்னைத் தமர் உய்த்துப் பெய்ய வேண்டித் *
தாழ்குழலாள் துணிந்த துணிவை **
பொன்னியல் மாடம் பொலிந்து தோன்றும் *
புதுவையர் கோன் விட்டுசித்தன் கோதை *
இன்னிசையால் சொன்ன செஞ்சொல் மாலை *
ஏத்த வல்லார்க்கிடம் வைகுந்தமே 10

**ஆண்டாள் திருவடிகளே சரணம்**

---